**முதியோர்களுக்கான தேசிய செயலகம் - 2023**

-----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி திலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நஜதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, **முதியயோருக்கான தேசிய செயலகத்தின்** தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்டதுடன், மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் முதியோர்களுக்கான தேசிய செயலகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான “சிறப்பாகத் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 134 | நிறுவனத்தின் நிதி மற்றும் கணக்கீட்டு பணிகளை நிறைவேற்றும் நபர்களின் கட்டுப்பாட்டில் இருந்து | எதிர்காலத்தில் இஏனைய பணிகளுக்கு முற்பணம் பெற்றுக் | நிதிப் பிரமாணத்தில் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உள்ளகக் கணக்காய்வு சுதந்திரமானதாக காணப்பட வேண்டிய போதிலும் உள்ளகக் கணக்காய்வாளரினால் ஏனைய பணிகளை நிறைவேற்றுவதற்கு பல்வேறு கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | கொள்ளாதிருக்க அறிவுரை வழங்கப்பட்டது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 16,039,452 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 9,350,017 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6,689,435 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீண்டெழும் வருமானம் குறைவடைந்தமை முக்கியமான காரணமாக அமைந்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 51,713,000 தொகையான காணி மற்றும் கட்டிடங்கள், ரூபா 15,381,188 தொகையான சொத்துக்களை (பொருட்பதிவேடு) கொண்டமைந்த 6 அறைகள் கொண்ட குளிரூட்டப்பட்ட சுற்றுலா பங்களா கதிர்காமம் பூஜா நகருக்கு அருகிலுள்ள மெனிக் கங்கைக்கு அருகில் மிகவும் அழகான இடத்தில் அமைந்துள்ளதுடன் இந்த இடம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இந்த இடம் சுமார் 2 ஆண்டுகளாக எந்த வருமானத்தையும் ஈட்டவில்லை. முதியோர் இல்லத்துடன் இணைக்கப்பட்ட முதியோர்களுக்கான செயலகத்தின் உத்தியோகத்தர்களால் மேல் தளம் முழுமையாகவும், கீழ் தளத்திலுள்ள அறையிலும் குடும்ப உறுப்பினர்களுடன் வசித்ததே வருமான இழப்புக்கு முக்கியக் காரணமாக காணப்பட்டது. மாதிரிப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 2023 ஜுலை, | கொவிட் தொற்று ஏற்பட்ட காலப்பகுதியில் இந்த சுற்றுலா விடுதி சுற்றுலா பயணிகளுக்கு வழங்கப்படாததாலும், உத்தியோகபூர்வ இல்லம் முற்றாக இடிக்கப்பட்டதாலும், உத்தியோகபூர்வ இல்லத்தில் குடும்ப உறுப்பினர்களுடன் வசித்து வந்ததாலும், அவர் தனது குடும்பத்துடன் வாழ அனுமதிக்கப்பட்டுள்ளார்.<br><br>அந்த வீடு உத்தியோகத்தரக்ளின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்ட நாளிலிருந்து சமூக பாதுகாப்பு நிதியத்திலிருந்து அல்லது அரச நிதியில் இருந்து தண்ணீர் அல்லது மின்சார கட்டணம் எதுவும் செலுத்தப்படவில்லை அல்லது மீளளிப்புச் செய்யப்படவில்லை என்பது. | பெறப்படும் நிதியை முதியோர் நலனுக்காக பயன்படுத்த வேண்டும் மற்றும் தாபனவிதியின் ஏற்பாடுகளுக்கு இணங்க உத்தியோகத்தர்களுக்கு வீட்டுமனை வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய 03 மாதங்களுக்கான சுற்றுலா விடுதியின் மின்சாரம் மற்றும் தண்ணீர் பயன்பாட்டிற்கான செலவு ரூபா 143,799 ஆன போதிலும், சுற்றுலா விடுதியில் தற்போது வதியும் உத்தியோகத்தர்களிடமிருந்து எந்த தொகையும் அறவிடாது சுற்றுலா விடுதி பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சட்டத்தின் பகுதி 1 இன் பிரிவு 2 இன் பிரகாரம் முதியோர்களுக்கான தேசிய செயலகம் தாபிக்கப்பட்டிருந்தது. மாதிரிப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நடந்த மற்றும் மீளாய்வாண்டின் போது, தேசிய சபையால் முதியோருக்கான தேசியக் கொள்கையை உருவாக்குதல், ஒரு தொழில்சார் சுகாதார காப்பீட்டுத் திட்டத்தைத் தயாரித்தது, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து முதியோர் இல்லங்களையும் பதிவுசெய்து நிறைவு செய்தல், முதியோர் பராமரிப்பு சேவை பயிற்சித் திட்டத்தை செயல்படுத்துதல், மனநலம் குன்றிய முதியோர்களுக்கான ஆலோசனை சேவைகளை வழங்குதல் போன்ற முக்கியமான தீர்மானங்களை இந்த அறிக்கையின் திகதி வரை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. | தேசிய முதியோர் கொள்கை வரைவு தயாரிக்கப்பட்டு வருகிறது எனவும், காப்பீட்டுத் திட்டத்தின் பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதும், 2024 செப்தம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் அனைத்து முதியோர் இல்லங்களும் பதிவு செய்யப்பட வேண்டும் என தீர்மானித்தல், முதியோர் பராமரிப்புப் பயிற்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நிறுவனங்களுக்கு சான்றிதழ்களை வழங்குவது மற்றும் ஏற்றுக்கொள்வது தொடர்பான சிக்கல்கள் உரிய நிறுவனங்கள் மற்றும் மனநலம் குன்றிய பெரியவர்களுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கு அமைச்சிடம் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அங்கொட மனநல வைத்தியசாலைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தேசிய சபையால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சட்டத்தின் 13 (ஒ) இன் படி, முதியோர்களுக்கான சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதும் செயல்படுத்துவதும் சபையின் பணியொன்றான போதிலும், | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துடன் முதியோர் காப்புறுதி நலன் முறைமையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் | சட்டத்தின் விதிகளின்படி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடந்த வருடம் முதல் 03 சந்தர்ப்பங்களில் தேசிய சபையின் உத்தியோகத்தர்களால் உறுப்பினர்கள் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த முன்மொழிவுகளை சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை முதியோர்களுக்கான காப்பீட்டுப் முறை எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | கலந்துரையாடப்பட்டு முன்மொழிவுகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான தேசிய சபையின் அனுமதியைப் பெற்றதன் பின்னர் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சட்டத்தின் பிரிவு 13 (க) இன் படி, முதியோர்களின் உள்ளார்ந்த திறன்கள் மற்றும் திறமைகள் அடங்கிய பட்டியல் பொதுமக்களின் தகவலுக்காக பராமரிக்கப்படவில்லை. | இதற்காக உரிய பிராந்திய அதிகாரச்சபை மற்றும் பிரதேச செயலகங்களில் முதியோர்களின் விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களால் பெறப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்பட்டு, அதற்கான தரவு கட்டமைப்பு தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு பெயர்ப்பட்டியல் பராமரிக்கப்பட வேண்டும். |
| (இ) | சட்டத்தின் 12 வது பிரிவின்படி, இலங்கையில் முதியோர் நலன் மற்றும் உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பது மற்றும் முதியோர்களின் சுயகௌரவம், சுயாதீனத்துவம் மற்றும் மரியாதையுடன் வாழ்வதற்கு முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் முதியோர்களுக்கான தேசிய கொள்கையொன்று தயாரிப்பதற்காக 2016 ஆம் ஆண்டின் போது கிடைத்த மானியங்கள் அரசாங்கத்தினால் ரூபா 2,438,715 செலவிடப்பட்டுள்ள போதிலுத், தேசியக் கொள்கையைத் தயாரிக்கும் பணிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை செயல்படுத்தப்படவில்லை. எஞ்சிய தொகையான ரூபா.1,807,092 தொகை சுமார் 07 வருடங்களாக பொது வைப்புக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டது. | தேசிய கொள்கை மீண்டும் திருத்தப்பட்டு இறுதி வரைவு தயாரிக்கப்பட்டு 03 மாதங்களுக்குள் வழங்கப்படும் என்பது. | சட்டத்தின் விதிகளின்படி, முதியோருக்கான தேசிய கொள்கையை விரைவாக தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | பிரிவு 13 (ஈ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், சபையின் பணியொன்றான முதியவர்களின் சுதந்திரம், கவனிப்பு, சுயநிறைவு, பங்கேற்பு, கண்ணியம் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தேசிய மட்டத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பிரதிபலன்கள் சமனாக பகிரப்படுவதை இலகுபடுத்தும் வகையில் நடைமுறைப்புடுத்துவதற்கு முதியோர்களின் எண்ணிக்கை மற்றும் மாவட்ட அடிப்படையில் செயற்திட்டங்கள், வயதுக் கட்டமைப்பு, சுகாதார நிலை மற்றும் பொருளாதார நிலையை இனங்காணல் மற்றும் திட்டவட்டமான, துல்லியமான மற்றும் பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு முதியோர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட கால அடிப்படையிலான தரவுக் கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் தரவுக் கட்டமைப்பின் ஆரம்பப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பது. | சட்டத்தின் விதிகளின்படி, முதியோர் சமூகத்தின் தகவல்களை உள்ளடக்கிய தரவு கட்டமைப்பைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சட்டத்தின் பிரிவு 34 இன் கீழ் சமூக சேவைகள் அமைச்சரால் உருவாக்கப்பட்ட கட்டளை 2(1) இன் கீழ் முதியோர்களுக்கு குடியிருப்புப் பராமரிப்பு அளிக்கும் நோக்கத்தில் ஒரு நிறுவனத்தை நிறுவுதல் மற்றும் பராமரிப்பதில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபரும் அல்லது அமைப்பும், ஐந்துக்கும் மேற்பட்ட முதியவர்கள் வசிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனம் முதியோர்களுக்கான தங்குமிட பராமரிப்பு வழங்கும் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற வர்த்தமானி அறிவிப்பு வெளியாகி 11 வருடங்கள் கடந்துள்ள போதிலும், தற்போது இலங்கையில் இயங்கிவரும் 349 முதியோர் இல்லங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 113 வீடுகள் மட்டுமே தேசிய | எஞ்சிய அனைத்து முதியோர் இல்லப் பதிவுகளும் தற்போது நடைபெற்று வருகிறது என்பதும் அதனை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும். | இச்சட்டத்தின்படி அனைத்து முதியோர் இல்லங்களும் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதியோர் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. | | |
| (ஊ) | மீளாய்வாண்டில் திறைசேரி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்ட 09 செயற்பாடுகளுக்காக திறைசேரியால் ரூபா 17.42 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த தொகையில் முதியவர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக ரூபா.5,719,495 மட்டுமே எஞ்சியிருந்ததுடன், ரூபா.11,233,666 மேற்பார்வை மற்றும் நிர்வாகத்திற்காக செலவிடப்பட்டது. இது மொத்த நலன்புரிச் செலவில் 66 சதவீதமாகும். | அனைத்துத் செயற்திட்டங்களுக்கும், முதியோரகளுக்கான தேசிய செயலகத்தின் முடிவெடுப்பதில் நிர்வாகச் செலவுகள் மற்றும் பராமரிப்பு சபையை நடாத்துவதற்கு செலவிடப்பட்டுள்ளது என்பது மற்றும் இந்த செயல்பாடுகளுக்கான நிதியை சமூக பாதுகாப்பு நிதியிலிருந்து பெற முடியாது என்பதால், மற்றும் இந்த பணிகளும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பணியானமையால் இந்த பணம் செலவிடப்பட்டுள்ளது என்பது. | நோக்கத்திற்கேற்ப செலவு வரம்பிற்குள் பணிகளை மேற்கொள்ள வேண்டும். |